**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 58 of 2024

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court }

Name : பிஷிரா ஜெனா

Father's Name : நாராயண் ஜெனா

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of September** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

சாட்சி ஹிந்தி மட்டும் தனக்கு தெரியும் என தெரிவித்தார். ஆகவே நீதிமன்ற அலுவலக உதவியாளர் தனபால் என்பவர் மூலமாக மொழிபெயர்ப்பு செய்து அவர் என்னிடம் தெரிவித்து சாட்சியத்தினை அப்படியே பதிவு செய்தேன்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. எனது சொந்த ஊர் ஒரிசா மாநிலம். தற்பொழுது திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் தங்கி கட்டிட வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த நாராயண் ஜெனா எனது தந்தை ஆவார். கடந்த 22.02.2023 ம் தேதியன்று காலை எனது அப்பா கடைக்கு செல்வதாக கூறி சென்றார். காலை 08.00 மணியளவில் மேற்படி சம்பவ இடத்தின் அருகே இருந்த கடைக்காரர்கள் எனக்கு விபத்து குறித்து தகவல் சொன்னார்கள். அவருடைய பெயர் எனக்கு தெரியாது. உடனடியாக நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது என் அப்பாவை ஆம்புலன்சின் மூலம் கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். என் அப்பாவிற்கு பின்பக்க தலை, உடல் முழுவதும்

காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் எனது அப்பாவை நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது சிகிச்சையில் இருந்தார். அருகில் நான் விசாரித்தபோது நான்கு சக்கர வாகனம் என் அப்பாமீது மோதிவிபத்து ஏற்படுத்தியதாக தெரிவித்தார்கள்.

2. பின்னர் நான் காவல் நிலையத்தில் விபத்து ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது. புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியிடு செய்யப்படுகிறது. புகாரினை போலீசார் எழுதினார்கள். பின்னர் சிகிச்சையிலிருந்த என் அப்பா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். எனது அப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் புகார் கொடுக்க சென்றபோது பட்டியல் சாட்சி 2 அமுல்யா கோடாவுடன் சென்றிருந்தேன். நான் மருத்துவமனை சென்றபோது எனது அப்பா மட்டும் மருத்துவமனையில் சிசகைச்சை பெற்றார். அவருடன் யாரும் இல்லை. விபத்து சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ விபத்தானது எனது தந்தை சாலையை கவனிக்காவமல் திடீரென சாலையை கடந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.09.17 17:28:54 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**